(ஆ) ஆம் எனில், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டுள்ள வேளச்சேரி பகுதிக்கு 20.10 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வுகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் நடத்தி வருகிறது. விரைவில் இவ்வேலைகள் முடிக்கப்பட்டு, திட்டம் நிறைவேறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, வேளச்சேரி பகுதி சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக கிராமங்களிலே இப்படி திறந்த குளங்களிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடிப்பதை நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் மாநகராட்சி போன்ற இந்தப் பகுதிகளில் கூட அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறதே. எனவே, இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா? எப்பொழுது இந்தத் திட்டம் முடியும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

[முற்பகல் 10.20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, வேளச்சேரி பகுதியில் தண்ணீர் வழங்குவதற்கான திட்டத்திற்காக 20.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பொறியியல் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இவ்வேலைகள் முடிக்கப்பட்டு, திட்டம் நிறைவேறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பம்மல் நல்லதம்பி: தலைவரவர்களே, விரைவில் என்றால் எவ்வளவு காலம் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, "as early as possible" என்று அர்த்தம்.

திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் தினக்கூலிகளாகப் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்குதல்.

*வினா எண் 77—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் தினக்கூலியாக வேலை செய்கிறவர்களை நிரந்தரமாக்குவதற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் எண்ணிக்கை எத்தனை?

1981 ஆகஸ்டு 26]

(இ) அதில் நிரந்தர வேலை வாய்ப்பு பெற்றவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) காலியிடங்களை நிரப்புவதற்கு நேர்முகத்தேர்வுகள் நடைபெற்றன. இதில் தினக் கூலியாக வேலை பார்ப்பவர்களும் கலந்துகொண்டார்கள்.

(ஆ) 163 தினக்கூலியாளர்கள் கலந்து கொண்டனர்.

(இ) 56.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு இந்த நேர்முகத் தேர்வு நடைபெற்றது. அந்த நேர்முகத் தேர்வு நடைபெற்று இரண்டாண்டுக் காலமாகியும் தினக் கூலிகளாக வேலை செய்கின்றவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. இந்தத் தாமதத்திற்கு என்ன காரணம் என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு கட்டமாக, 4—11—78-லேயும், 19—12—78-லேயும் தேர்வுகள் நடைபெற்றன. அந்த நேர்முகத் தேர்வுக்குப் பிறகு அங்கே கேஷுவல் லேபர்களாகப் பணிபுரிபவர் களிலே இருந்து ஏறத்தாழ 90 பேருக்குமேல் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அங்கே தினக்கூலிகளாக வேலைசெய்தவர்கள் இன்னும் தினக்கூலிகளாகத் தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த சர்க்கரை ஆலை ஓடுகின்ற நேரத்தில்தான் தினக்கூலிகளாக அவர்கள் அமர்த்தப்படுகிறார்கள். அவர்களில் அந்தத் தேர்விலே கலந்து கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். அந்த பல பேர்களிலே தகுதியுடையவர்களுக்காவது அந்த வேலைவாய்ப்பை அளிக்க அரசு முன்வருமா? அதைப்போல அங்கே நிலம் கொடுத்தவர்கள் நிலத்தை உழுதவர்கள் சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கும் பொழுது அங்கேயுள்ள நிர்வாகிகள் அவர்களுக்கு வாக்கு கொடுத் திருந்தார்கள், உங்களுக்கு வேலை தருகிறோம் என்று. அதையும் இந்த அரசு நிறைவேற்றவில்லை. இதை உடனடியாகக் கவனித்து அந்த விவசாயிகளுக்கும், நிலம் கொடுத்தவர்களுக்கும் அங்கே தினக்கூலிகளாக வேலை செய்பவர்களுக்கும் உடனடியாக வேலை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப்போல தினக்கூலிகளாக அந்த ஆலை யிலே மட்டுமல்ல; இன்னும் பல்வேறு ஆலைகளிலே பணிபுரி கிறார்கள்.

நேர்முகத் தேர்வு நடத்துவதே திறமையின் அடிப்படையிலே தேர்ந்தெடுப்பதற்காகத்தான். தினக்கூலிகளாகப் பணியாற்று கின்றவர்கள் அத்தனை பேர்களையுமே அப்படியே நிரந்தரத்

தொழிலாளர்களாகத் தேர்வின்றி அல்லது நேர்முகத் தேர்வின்றி ஏற்றுக்கொள்வதில்லை. நேர்முகத் தேர்வின்பொழுது தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் தகுதியின் அடிப்படையிலே.

சம்பந்தப்பட்ட ஆலைகளுக்கு நிலம் கொடுத்தவர்கள் என்ற அந்த அடிப்படையிலே முன்னுரிமையும் அவர்களுக்கென்று வழங்கப்பட்டு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள், தினக்கூலிகளாகப் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல், சென்னையைச் சுற்றியிருக்கின்ற பல சிறு தொழில் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களில் எவ்வளவு பேர் தினக்கூலிகளாக இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி திருப்பத்தூர் சர்க்கரை ஆலையைப் பற்றியது.

பெரம்பலூர் சர்க்கரை ஆலை.

*வினா எண் 78— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரம்பலூர் சர்க்கரை ஆலை 30–9–1979 முடிய வரவு செலவு கணக்கில் சுமார் 53 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) நஷ்டம் ஏற்பட்டதற்கான காரணத்தை அரசு ஆராய்ந்ததா?

(இ) ஆம் எனில் அது பற்றிய நடவடிக்கை என்ன?

(ஈ) இந்த ஆலையிலிருந்து கிடைக்கும் இதர உப பொருள்கள் என்னென்ன?

(உ) இந்த உப பொருள்கள் விற்பனையில் லாபமா? நஷ்டமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) நஷ்டம் வியாபார ரீதியானது. எனினும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஈ) சர்க்கரைக் கழிவுப்பாகு, கரும்புச் சக்கை மற்றும் கழிவு மண் ஆகியவையாகும்.

(உ) முக்கிய உப பொருளான கழிவுப்பாகு அரசு நிர்ணயித்த விலையில் விற்கப்படுகிறது.